190—

திருமண மண்டபம்

***4020—திரு. ஓ.கே. சின்னராஜ்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையத்தில் உள்ள அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயிலில் திருமண மண்டபம் கட்ட அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், தேக்கம்பட்டி அருள்மிகு வனபத்ரகாளியம்மன் திருக்கோயிலின் உபகோயிலான மேட்டுப்பாளையம் அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயிலில், ரூபாய் 1,02,40,000/– மதிப்பீட்டில், திருப்பணிகள் மற்றும் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் முடிவுற்றதும், குட முழுக்கு நடத்தப்படவுள்ளது. குடமுழுக்கு நிறைவு பெற்றதும், பக்தர்கள் மற்றும் பொது மக்களின் தேவையைக் கருதி, மதிப்பீடு தயார் செய்து, திருமண மண்டபம் கட்ட மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.

திரு. ஓ.கே. சின்னராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'இருந்தாலும் மறைந்தாலும் பேர் சொல்ல வேண்டும்.
இவர்போல யாரென்று ஊர் சொல்ல வேண்டும்'
(மேசையைத் தட்டும் ஒலி)

2017 ஜூலை 12]

என்னும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் பாடல் வரிகளுக்கேற்ப வாழ்ந்த (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை நினைவுகூர்ந்து வணங்குகிறேன்.

எனது மேட்டுப்பாளையம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மேட்டுப்பாளையம் நகராட்சியில் அமைந்திருக்கின்ற அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயிலில் கல்யாண மண்டபம் கட்டிக்கொடுக்க வேண்டும் என்று கேட்டிருந்தேன். அதைக் கட்டிக்கொடுப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே அறிவித்ததற்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். நகராட்சியின் மையப் பகுதியில் பவானி ஆற்றங்கரை ஓரத்தில் அமைந்திருக்கிற இந்தத் திருக்கோயில் மிகவும் பழமை வாய்ந்தது. கடந்த காலங்களில் நகராட்சியில் மட்டுமல்லாமல், கிராமங்களிலும் இருக்கின்ற பல்வேறு பக்தர்களும் அங்கு வந்து, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னராஜ், நீங்கள் கேள்வி கேட்க ஆரம்பித்தீர்களானால், உங்களுக்கு முடிப்பதற்கு தெரிவதேயில்லை. உரையை ஆரம்பித்துவிடுகிறீர்கள். முடிக்கத் தெரிவதில்லை.*

திரு. ஓ.கே. சின்னராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முடித்துவிடுகிறேன். அந்த திருக்கோயிலிலுள்ள திருமண மண்டபத்தில்தான் பல இடங்களிலிருந்து வரும் பக்தர்கள் திருமணம் செய்வார்கள். அந்த அளவிற்கு இருந்த அந்தத் திருக்கோயில், நாளடைவில் சிதிலம் அடைந்து, மிகவும் பயனற்றதாக ஆகிவிட்டது. கடந்த கால ஆட்சியில் மாண்புமிகு அம்மா அவர்களிடத்தில் இந்தத் திருக்கோயிலைப் புதுப்பித்துத் தர வேண்டும் என்று கேட்டவுடனேயே, 1 கோடியே 2 இலட்சம் ரூபாய் நிதியை அள்ளித்தந்து, இன்றைக்கு அந்தத் திருக்கோயிலின் மூலஸ்தானப் பணிகள் நடந்துகொண்டிருக்கின்றன. எஞ்சியிருக்கின்ற முன் மண்டபம், கொடிக்கம்பம் நடுதல் மற்றும் கழிப்பறைகள் கட்டுதல், சுற்றுச்சுவர் அமைத்தல் போன்ற பணிகளுக்கு நிதி இல்லாமல் இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்குண்டான நிதியை ஒதுக்கீடு செய்து கொடுத்து, வருகிற இந்த ஆண்டிலேயே குடமுழுக்கு செய்திட ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோரிய கருவறை மற்றும் முகமண்டபம், விமானம், கருங்கல் மகா மண்டபம் கட்டும் பணி, அம்மன் உப சன்னதி கட்டும் பணி, சிவன் சன்னதி கட்டும் பணி, வடமேற்குப் பகுதியில் வெளிப்பகுதி சுற்றுச்சுவர் கட்டும் பணி, வடகிழக்குப் பகுதி, தென்மேற்குப் பகுதி சுற்றுச் சுவர் கட்டும் பணி, நவக்கிரக சன்னதி கட்டும் பணி மற்றும் முன் மண்டபம் கட்டும் பணிகள் போன்ற திருக்கோயிலின் அனைத்துப் பணிகளுக்கும் இந்த நிதியாண்டில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, பணிகள் துவங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள். வாய்ப்பு வேண்டாமா? போதுமா? நன்றி. மிகவும் சந்தோஷம். மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. புகழேந்தி அவர்கள்.*

திரு. சு. புகழேந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மதுராந்தகம் தொகுதியில், மதுராந்தகம் ஒன்றியத்தில், மேலவையாவூர் என்கிற ஊரில் ஒரு பெருமாள் கோயில் இருக்கிறது. அங்கு ஒரு திருமண மண்டபம் கட்டித் தரப்படுமா? மேலும், அச்சிறுப்பாக்கம் ஒன்றியத்தில், திருப்பெரும்பெயர்கண்டிகையில் ஒரு முருகர் கோயில் உள்ளது. அங்கு ஒரு திருமண மண்டபம் கட்டித் தரப்படுமா? மேலும், என்னுடைய மதுராந்தகம் நகரத்தில் ஏரிகாத்த இராமர் கோயில் இருக்கிறது. அச்சிறுப்பாக்கம் நகரத்தில், ஆச்சீஸ்வரர் கோயில் இருக்கிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அனைத்துக் கோயில்களுக்கும் செய்து கொண்டிருக்க முடியாது. ஒரே ஒரு கோயிலை மட்டும் கேளுங்கள்.*

முற்பகல் 11–15

திரு. சு. புகழேந்தி: *ஆச்சீஸ்வரர் கோயில் இருக்கிறது. சபரிமலையில் ஐயப்பனுக்கு ஹரிஹரன் என்ற பெயர் உண்டு.*

2017 ஜூலை 12]

அரியும், சிவனும் கலந்து என்னுடைய தொகுதியிலேதான் இருக்கிறார்கள். சபரிமலையிலே ஐயப்பனுக்கு இப்போது தங்கத்திலே கொடியேற்றி இருக்கிறார்கள். அவர்களுடைய parents–க்கு at least வெள்ளியிலாவது கொடிமரம் ஏற்றுவதற்கு வாய்ப்பு உண்டா என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய திருக்கோயில், அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் வரும்பட்சத்தில், திருமண மண்டபம் கட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டால், அதை ஆய்வு செய்து, நிதியாதாரத்தை கருத்தில்கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று. உரிய முறையில் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். நடராஜ் அவர்கள்.

திரு. ஆர். நடராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை மானியக் கோரிக்கையில் 54 அறிவிப்புகளை அறிவித்து, உத்வேகத்துடன் செயல்படும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாப்பூரிலுள்ள கபாலி கோயில் குளம், சித்தர் குளம், மாதவப் பெருமாள் குளங்கள் காய்ந்திருப்பதைப் பற்றி நேற்று அவையில் கேள்வி கேட்க வேண்டுமென்று நினைத்தேன். ஆனால், எனக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை. நான் கேட்க நினைத்த வேளையோ, என்னவோ தெரியவில்லை. நேற்றிரவு நல்ல மழை பெய்துள்ளது. ஆயினும், கோயில் குளங்கள் தரைதட்டி, வெப்பத்தினால் மிகவும் காய்ந்துள்ளன. தூர் வாரும் பணி தேவையில்லை என்று அறநிலையத் துறை அதிகாரிகள் கூறியுள்ளார்கள். ஆயினும், தரையை நன்கு கிளறி, மழைநீர் ஊருவதற்கு ஏதுவாக குளத்தை சமன் செய்ய வேண்டும். மேலும், மாதவப் பெருமாள்

கோயில் குளத்தில் எவ்வளவு மழை பெய்தாலும், அந்தக் குளம் நிரம்புவதில்லை. அதனைச் சீர் செய்து தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய குளங்களை அரசு அதிகாரிகள் மற்றும் துறை ஆணையருடன் சேர்ந்து நானும் ஆய்வு செய்தேன். அந்தக் குளத்தில் தண்ணீர் சரியாக நிரம்புவதில்லை என்று ஏற்கெனவே கோரிக்கை வந்திருக்கிறது. அதனடிப்படையிலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, அந்தக் குளத்தில் களிமண்ணை நிரப்பி, சீர் செய்ய ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

(அ) மாவட்ட அளவிலும் அதற்குக்கீழ் உள்ள நீதிமன்றங்களிலும் நீதிபதிகள் நியமனங்களில் அகில இந்திய தேர்வு முறையை அறிமுகம் செய்ய மத்திய அரசு முயற்சித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவக் கல்லூரியிலே சேர்வதற்கு 'நீட்' தேர்வு இருப்பதைப்போல, மாவட்ட அளவிலும், அதற்குக்கீழ் இருக்கக்கூடிய நீதிமன்றங்களிலும் நீதிபதிகள் நியமனங்களில் அகில இந்திய தேர்வு முறையைக் கொண்டு வருவதற்கு மத்திய அரசு எல்லா வகைகளிலும் முயற்சி செய்து கொண்டிருக்கிறது.